www.Padasalai.Net www.TrbTnpsc.com

FRM

# முதல் திருப்புதல் தேர்வு – 2021

12 - ஆம் வகுப்பு

## பொது தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - I 14X1 = 14

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. நரம்புக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2. பாரதியின் கடைசிக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?
அ) எட்டயபுரம் அரசருக்கு ஆ) நெல்லையப்பருக்கு இ) குத்திகேசவருக்கு ஈ) சீனி. விசுவநாதனுக்கு

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் அ) பருவநிலை மாற்றம்
ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது அ) தனிக்குடும்ப முறை
ஆ) விரிந்த குடும்ப முறை இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

5. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

6. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

7. காவினெம் கலனே, சுருங்கினம் கலப்பை – இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி

8. வெண்பா .............. வகைப்படும். அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

9. <u>பொய்யா வானம்</u> புதுப்பெயல் பொழிந்தென தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு அ) வினைத்தொகை
ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10. விளியறி ஞமலி இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

11. தலைக்குளம் என்னும் கதையின் ஆசிரியர் அ) பீர்முகமது
ஆ) தோப்பில் முகமது மீரான் இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன்

12. பலர் துஞ்சவும் தான் துஞ்சான் விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை – பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை – கோவூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை – கபிலர் ஈ) கரிகாலனை – உருத்திரங்கண்ணனார்

13. கிருத்துவக் கம்பர் என்று போற்றப்பட்டவர்
அ) வீரமாமுனிவர் ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் இ) ஜி.யு. போப் ஈ) ஈராசு பாதிரியார்

14. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள் அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

பகுதி – II - பிரிவு –1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. 'நகரம் பட்டை தீட்டியது வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

16. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

17. கலிவிழா, ஒளிவிழா – விளக்கம் தருக.

18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

பிரிவு – 2 **எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. மணந்தகம் என்றால் என்ன?

20. மணிலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

21. பருவத்தே பயிர் செய் நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு – 3 **எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பழித்தனர் ஆ) வந்து

23. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக. அ) Stapler ஆ) Jurisdiction

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

25. மரபு சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. அ) வழிவழியாக ஆ) கண்துடைப்பு

26. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க.
அ) கொண்டு ஆ) முன்

27. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க. களம் – கலம்

28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) தனியாழி ஆ) அருங்கானம்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர். ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் -
இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

பகுதி - III பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 X 4 = 8

31. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
32. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
33. ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது குறள் வழி விளக்குக.

பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 X 4 = 8

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37. திரைபடத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் எந்த முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

பிரிவு - 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3 X 4 = 12

39. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
சொற்பொருள் பின்வரும் அணியைச் சான்று தந்து விளக்குக.

40. பா நயம் பாராட்டல். (திரண்ட கருத்து, மையக்கருத்து, ஏற்புடைய நயங்கள் மூன்று அமைக்க)

*வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்!*
*கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்;*
*கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்!*
*தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்;*
*செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்!*
*கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்.*
*குற்றலாத் திரிகூட மலையெங்கள் மலையே.*

*- திரிகூட ராசப்பக் கவிராயர்*

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. *(அல்லது)* ஆ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

42. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் எட்டு வரிகளில் கவிதை புனைக.
நட்பு *(அல்லது)* இயற்கை

43. தமிழாக்கம் தருக. Popular As The 'Cultural Capital' Of India, Tamil Nadu is Extremely Well-known for its Marvelous Temples And Other Architectural Gems. The State Rose To Prominence Primarily Because Of Its Well-Known And Outstanding Tanjore Paintings That Hourished At The Time Of Chola Dynasty In Ancient Tanjavoor.

காதுகேளாதோர்க்கான வினா. கீழுள்ள பத்தியைப் படித்து விடையளிக்கவும்.

நகரங்கள், சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வளர்ச்சிக்கும், நிகழ்கால வாழ்விற்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை, தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும், தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

வினாக்கள் : அ) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?
ஆ) தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது?
இ) நகரங்கள்,சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன? ஈ) நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 X 6 = 18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)* ஆ) திருக்குறள் ஒரு வாழ்வில் இலக்கியம் - நிறுவுக.

45. அ) 'நெகிழி' தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)* ஆ) பண்டையக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து உன் கற்பனையில் எழுதுக. *(அல்லது)*
ஆ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6
அ) "துன்பு உளது எனின் ......" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'அரண்' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com